**World Environment Day Rally at Gudalur, The Nilgiris, Tamil Nadu**

CPREEC EIACP PC-RP, Ooty Field Office organised a Rally as part of World Environment Day celebrations at Gudalur, The Nilgiris on June 5, 2023. Mr. Rajendran, Range Forest Officer flagged off the Rally and Mr. F Robert, NGC Coordinator attended. A total of 180 persons participated in the Rally.



Dinakaran • Kovai • 6.6.2023

நீலகிரி

RNI Regn.No.33699/77 Postal Regn No. CB/002/2021-2023

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி

## ஆயிரம் மூங்கில் நாற்றுகளும் நடவு

கூடலூர்,ஜூன்6: உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிபிஆர் சுற்றுச்சூழல் கல்வி மைய அறக்கட்டளை சார்பில் கூடலூரில் வாழ்க்கை'சுற்றுச்சூழலுக்காக என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. தாலுக்கா அலுவலக வளாகத்தில் துவங்கிய பேரணி சுங்கம் ரவுண்டனா,தேவர் சாலை சாலை வழியாக தோட்டத் தொழிலாளர் தொழிற்பயிற்சி மைய வளாகத்தில் முடிவடைந்தது.

பேரணியை கூடலூர் வனச்சரகர் ராஜேந்திரன் தலைமை வகித்து கொடியசைத்து துவக்கி வைத்தார். கூடலூர் இன்ஸ்பெக்டர் அருள் முன்னிலை வகித்தார். கூடலூர் கல்வி மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ராபர்ட், தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மைய முதல்வர் சாஜி, ஆர்கே அறக்கட்டளை நிர்வாகி விஜயகுமாரி மற்றும் தொழிற்பயிற்சி மைய மாணவர்கள், மகளிர் சுய உதவி குழுவினர் பேரணியில் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி பேரணியில் கலந்து கொண்டனர்.இதேபோல் ஸ்ரீ மதுரை ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊராட்சி தலைவர் சுனில் பழம் தரும் மரக்கன்றுகளை நடவு செய்தார். நிகழ்ச்சியில் ஊராட்சி செயலர் சோனி மற்றும் ஊழியர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.மசினகுடியில் வனத்துறை மற்றும் சுற்றுலா வாகன ஓட்டுனர் சார்பில்

கூடலூரில் சிபிஆர் சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில் நடைபெற்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்ட தொழிற்பயிற்சி மைய மாணவர்கள்.

தினமலர்
கோயம்புத்தூர் | செவ்வாய் | 6.6.2023

# விழிப்புணர்வு ஊர்வலம் மாணவர்கள் பங்கேற்பு

கூடலூர், ஜூன் 6–

கூடலூரில், சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில், விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

கல்வி மையத்தின் கள அலுவலர் குமாரவேல் தலைமை வகித்தார். கூடலூர் வனச்சரகர் ராஜேந்திரன்; இன்ஸ்பெக்டர் அருள் துவக்கி வைத்தனர்.

ஊர்வலத்தில், 'சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும்; பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிக்க வேண்டும்,' என, வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது.



கூடலூரில் நடந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் தொழிற்பயிற்சி மைய மாணவர்கள் பங்கேற்றனர்.